PR/2018/33/T

# ஜப்பான் தூதரகம்

இல. 20, ஸ்ரீமத் ஆர்.ஜி. சேனானாயக்க மாவத்த, கொழும்பு 7, இலங்கை

தொலைபேசி: 94-11-269-3831~3, தொலைநகல் : 94-11-269-8629

மின்னஞ்சல்: cultujpn@sltnet.lk

டிசம்பர் 11, 2018

<u>ஊடக அறிக்கை</u>

**~Baseball for Tomorrow~**

**-நாளையதினத்திற்காக பேஸ்போல்-**

இலங்கைக்கான ஜப்பானிய தூதரகம் மற்றும் இலங்கை அமைச்சூர் பேஸ்போல் சம்மேளனம் ஆகிவற்றின் ஒத்துழைப்புடன் ஜப்பானிய மகளிர் பேஸ்பேல் சம்மேளனம் இலங்கையில் ஐந்து நாட்கள் பேஸ்போல் பயிற்சி முகாமை நடத்தியுள்ளது.

இலங்கைக்கு விஜயம் செய்த ஐந்து அங்கத்தவர்களின் விபரம் பின்வருமாறு:

ஹிரோகோ யமாடா-ஜப்பானிய பேஸ்பேல் சம்மேளனத்தின் சர்வதேச விவகார பணிப்பாளர்
அகிகோ ஷிமுரா- ஜப்பான் தேசிய பேஸ்போல் அணியின் பயிற்றுவிப்பாளர்
ரிஷா ககவா – அவுஸ்திரேலிய தேசிய பேஸ்போல் அணியின் பயிற்றுவிப்பாளர்
அயாகோ ரொகாகு-ஜப்பான் தேசிய பேஸ்போல் அணியின் முன்னாள் அங்கத்தவர்
கசூயா யாகி- ஜெயிக்கா அமைப்பின் முன்னாள் தொண்டாராக கண்டியில் செயற்பட்டவர். இலங்கையில் பெண்கள் பேஸ்போல் விளையாட்டின் முன்னேற்றத்திற்காக அதிக பங்காற்றியவர்.

Sport for Tomorrow என்ற நிகழ்ச்சித்திட்டத்தின் கீழே இவர்கள் இலங்கைக்கு விஜயத்தை முன்னெடுத்தனர். ஜப்பானிய வெளிவிவகார அமைச்சின் அனுசரணையிலான இந்த விஜயம் 2020ம் ஆண்டில் ஒலிம்பிக் சுடரானது டோக்கியோவை சென்றடையும் காலகட்டத்தில் நூற்றிற்கு மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த பத்து மில்லியன் மக்களுக்கு விளையாட்டின் மகிழ்ச்சியை கொண்டுசெல்வதையும் எதிர்காலத் தலைமுறையினருக்கு விளையாட்டின் பெறுமதியை பரப்புவதனையும் நோக்காகக் கொண்டுள்ளது.

இலங்கைக்கான விஜயத்தில் ஜப்பானிய மகளிர் பேஸ்போல் சம்மேளனம் இரண்டு நோக்கங்களை அடைவதற்கு எதிர்பார்ப்புக்கொண்டிருந்தது.

1) பேஸ்போல் விளையாட்டுடன் பரிச்சயம் இல்லாத மகளிர் மற்றும் பெண்கள் மத்தியில் பேஸ்போலின் மகிழ்ச்சியையும் பரவசத்தையும் வியாபித்தல்
2) ஏற்கனவே துடிப்போடு விளையாடும் பெண் வீராங்கனைகளின் திறன்கள் மற்றும் நுட்பங்களை பகிர்ந்துகொண்டு அவர்களது ஆற்றல்களை விருத்திசெய்தல்

முதல் நோக்கமானது கண்டியில் 100ற்கும் அதிகமான ஆரம்பப் பயிலுனர்களின் பங்குபற்றுதலுடன் டிசம்பர் 6ம் மற்றும் 7ம் திகதிகளிலும் டிசம்பர் 10ம் திகதியன்றும் டியகமவிலுள்ள ஜப்பான் -இலங்கை நட்புறவு மைதானத்தில் ஏறத்தாழ 50 ஆரம்பநிலை பயிலுனர்களின் பங்கேற்புடனும் இடம்பெற்ற மூன்று நாள் பயற்சி முகாம் மூலமாகவும் ஈடேறியது. டீயகமவில் இடம்பெற்ற பயிற்சி முகாமில் களனி பல்கலைக்கழகம் , ஸ்ரீ ஜயவர்த்தன புர பல்கலைக்கழகம் , ஸ்ரீமாவொ உயர் பாடசாலை மற்றும் மாகெதர உயர் பாடசாலை ஆகியவற்றின் மாணவிகள் பங்கேற்றிருந்தனர்.

இரண்டாவது நோக்கத்தின் அடிப்படையில் இலங்கை இராணுவம் மற்றும் கடற்படை ஆகியவற்றின் வீராங்கனைகளுக்காக டிசம்பர் 7ம் திகதி முதல் 9ம் திகதி வரை டியகமவிலுள்ள ஜப்பான் -இலங்கை நட்புறவு மைதானத்தில் பேஸ்போல் பயிற்சி முகாமொன்று நடைபெற்றது.

இலங்கை இராணுவ் தலைவி மில்கா பிரியதர்ஸனி கருத்துவெளியிடுகையில் “ என்னுடைய 4 வருட தொழிற்சார் விளையாட்டு வாழ்வில் ஜப்பானிய பயிற்றுவிப்பாளர்களால் பயிற்றுவிக்கப்பட்ட முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும். அந்தவகையில் இந்தப் பெறுமதியான சந்தர்ப்பத்தை நான் மிகவும் பாராட்டுகின்றேன்.’’ இதேவேளை இலங்கை கடற்படை அணித்தலைவி எஸ்.டபிள்யு. எஸ்.எம் விக்ரமரத்ன கருத்துவெளியிடுகையில் இந்த பயிற்சி முகாமில் பங்கேற்றதனூடாக நான் அதிகமான விடயங்களை அறிந்துகொண்டேன். அவர்கள் மிகவும் இரக்கமுடையவர்களாகவும் நட்புறவுடனும் பழகினார்கள். நாம் மிகவும் சந்தோஷமடைந்தோம். அது மிகவும் விநோதமாகவும் இடம்பெற்றது.!’’

ஜப்பானிய தூதுவரின் வாசஸ்தலத்தில் டிசம்பர் 10ம் திகதி இடம்பெற்ற பிரியாவிடை வைபவத்தில் உரையாற்றிய இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் அகிரா சுகியாமா இலங்கை வீராங்கனைகள் மிகவும் உற்சாகத்துடன் பங்கேற்றமைக்காக தனது பாராட்டுதல்களைத் தெரிவித்ததுடன் பேஸ்போல் விளையாட்டில் உச்சநிலையை அடைவதற்காக காண்பிக்கும் ஆர்வத்தையிட்டும் மிகவும் ஈர்ப்பினை வெளிப்படுத்தினார். இந்த முகாம் நடைபெறுவதனை சாத்தியமாக்கியவர்களுக்கு விசேடமாக திரு. பாஸில் ஹுசைன் தலைமையிலான இலங்கை அமைச்சூர் பேஸ்போல் சம்மேளனத்திற்கு இதயபூர்வமான நன்றிகளை இலங்கைக்கான ஜப்பானியத் தூதுவர் தெரிவித்தார்.

---

மேலதீக விபரங்களுக்கு தயவுசெய்து கலாசார பிரிவைத் தொடர்புகொள்ளவும்.

Tel: 011-269-3831~3 (ext.227)













